**சிலாபம் பிளான்டேஷன் லிமிட்டட் -2019**

---

## 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

சிலாபம் பிளான்டேஷன் லிமிட்டட்டின் (“கம்பனி”) 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து கம்பனியின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, கம்பனி தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது கம்பனியை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கம்பனியின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் கம்பனியின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு கம்பனி அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்)**

---

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு கம்பனிக்கு உள்ள ஆற்றல் தொடர்பில்

குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் கம்பனியின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

தேவையானவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- கம்பனியின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- கம்பனியின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கம்பனி இணங்கியிருந்ததா என்பதும்,

- கம்பனி அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- கம்பனியின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.5.1 இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| இணங்காமை | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| இலங்கை கணக்கீட்டு நியம இல. 16 இன் 51 ஆம் பந்தியின் பிரகாரம் நடைமுறையல்லாச் சொத்துக்களின் ஆயுட்காலம் வருடாந்தம் மீளாய்வு செய்யப்பட்டிருக்காததால் 2018 ஆம் ஆண்டளவில் முழுமையாக | மோட்டார் வாகனங்களின் மீள்மதிப்பீடு 2018 ஆம் ஆண்டில் விலைமதிப்பீட்டு திணைக்களத்திற்கு ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் 2019.12.31 வரையிலும் சிலாபம் | இலங்கை கணக்கீட்டு நியம ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| பெறுமானத்தேய்விடப்பட்ட ரூபா 130.3 மில்லியன் கிரயமான 08 வாகனங்கள், 18 மோட்டார் வாகனங்கள் மற்றும் விவசாய வாகனங்கள் தற்போதும் செயற்படும் நிலையில் காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்கீட்டு நியம இல. 08 இன் பிரகாரம் மதிப்பிடப்பட்ட தவறை திருத்தம் செய்வதற்கும் நிதிக்கூற்றுக்களில் சரியான கொண்டுசெல்லும் பெறுமதியை சுட்டிக்காட்டுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பிளான்டேஷன் லிமிட்டட்டால் அறிக்கைகள் பெறப்பட்டிருக்கவில்லை. எனினும் இந்த ஆண்டினுள் நிறுவனத்திடம் இது தொடர்பாக விசாரணை செய்வதற்கும் மதிப்பீட்டு அறிக்கைகளை வழங்குவதில் ஏதாவது தாமதம் காணப்பட்டால் இன்னொரு தகுதிவாய்ந்த நிறுவனத்தின் மூலம் உரிய மீள்மதிப்பீட்டை மேற்கொள்வதற்கும் கவனம் செலுத்தப்பட்டிருந்தது. | |

## 1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்கீட்டுக் குறைபாடுகள் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 1992 ஆம் ஆண்டில் மக்கள் தோட்ட அபிவிருத்தி சபையால் கம்பனிக்கு வழங்கப்பட்டிருந்த 5733 ஹெக்டயர் காணியில் ரூபா 4.6 மில்லியன் பெறுமதியான காணியின் 184.15 ஹெக்டெயர் பரப்பளவொன்றை கணக்குகளிலிருந்து அகற்றுவதற்கு தேவையான சீராக்கங்கள் மேற்கொள்ளப்பட்டிருக்காததுடன் மீளாய்வாண்டின் இறுதியளவில் சட்டவிரோதமான சுவீகரிப்பு, அரசாங்கத்தின் தேவைப்பாடுகளிற்கான இடஒதுக்கீடு மற்றும் பொதுப் பயன்பாடுகளிற்கான காரணமாக கம்பனியால் இழக்கப்பட்டிருந்தது. | இக் காணிகள் 1976 ஆம் ஆண்டில் ஜனவசமவிற்கு மாற்றப்பட்டிருந்தன. 1992 இல் ஜனவசமவின் (Janawasama) கீழ் முகாமை செய்யப்பட்ட காணிகள் சிலாபம் பிளான்டேஷன் லிமிட்டட்டிற்கு குத்தகை உடன்படிக்கை ஒன்றின் கீழ் மாற்றப்பட்டிருந்தது. சில காணிகள் சிலாபம் பிளான்டேஷன் லிமிட்டட்டிற்கு பௌதீக ரீதியாக மாற்றப்பட்டிருக்கவில்லை. 185.15 ஹெக்டெயர் பரப்பளவின் தற்போதைய நிலைமையை கருத்தில் கொள்ளும் போது 1992 இற்கு முன்னர் விடுவிக்கப்பட்ட காணிப் பரப்பளவு 141.66 ஹெக்டெயர் ஆக சுட்டிக்காட்டப்பட முடியும். | நிதிக்கூற்றுக்களிலிருந்து விடுவிக்கப்பட்ட காணிகளின் பெறுமதியை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | கள ஆய்வை மேற்கொள்ளாமல் கம்பனியால் ரூபா 4.45 மில்லியன் கிரயத்தில் 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளில் புத்தளம் மங்கல எலிய தோட்டத்தில் 18.75 ஹெக்டெயர் பரப்பளவில் ஆரம்பிக்கப்பட்ட 3,850 மரமுந்திரிகை மரங்கள் உள்ளடங்கிய பெருந்தோட்டம் 2015 ஆம் ஆண்டளவில் முழுமையாக அழிவடைந்திருந்த போதிலும் அது | 18.75 ஹெக்டெயர் பரப்பளவில் 2 செயற்திட்டங்களின் போது 2013 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்ட 10.75 ஹெக்டெயர் பரப்பளவிலான மரமுந்திரிகை பெருந்தோட்டத்திற்காக 2013 தொடக்கம் 2015 வரையான ஆண்டு காலத்திற்கு ரூபா 3,740,610 தொகையான கிரயம் ஏற்பட்டிருந்தது. 2013 ஆம் | கணக்குகளிலிருந்து பௌதீக ரீதியாக காணப்பட்டிருக்காத சொத்துக்களை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | தொடர்பான சீராக்கங்கள் கணக்குகளில் மேற்கொள்ளப்பட்டிருக்காததுடன் மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களில் இச்செலவினம் மூலதனமாக்கப்பட்டிருந்தது. | ஆண்டில் இச் செயற்திட்டத்திற்காக ஏற்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 2,975,720 ஆக காணப்பட்டது. பணிப்பாளர் சபைக்கு இவ் விடயத்தை குறிப்பிடுவதற்கும் வெற்றியளிக்காத பயிர்ச்செய்கை தொடர்பாக இறுதி தீர்மானமொன்றை எடுப்பதற்கும் எதிர்பார்க்கப்படுகின்றது. | |

**1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்கீட்டுக் குறைபாடுகள் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சிலாபம் மற்றும் பளுகஸ்வெவவிலுள்ள இரண்டு விற்பனை நிலையங்கள் மற்றும் பளுகஸ்வெவவிலுள்ள மரமுந்திரிகை செயன்முறைப்படுத்தும் நிலையம் என்பவற்றின் ஆவணப்படுத்தப்பட்ட இருப்பு மீதிக்கும் பௌதீக ரீதியான இருப்பு மீதிக்கும் இடையே ரூபா 551,581 பெறுமதியான பூர்த்தி செய்யப்பட்ட மரமுந்திரிகைகளில் 259 Kg பற்றாக்குறையொன்று காணப்பட்டது. 2019 யூலை 30 அளவில் பளுகஸ்வெவ மற்றும் தலைமை அலுவலகத்தில் ரூபா 76,860 பெறுமதியான 200 தேங்காய் எண்ணெய் போத்தல்களின் பற்றாக்குறையொன்று காணப்பட்டது. 2020 யூலை 31 வரையிலும் இப் பற்றாக்குறைகளிற்கு பொறுப்பான உத்தியோகத்தர்களிற்கு எதிராக எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | குறித்த கணக்காய்வு ஐயவினாவில் குறிப்பிடப்பட்ட விடயங்கள் தொடர்பாக ஆரம்ப விசாரணைகள் நடாத்தப்பட்டு வருகின்றதுடன் குறித்த நடவடிக்கைகள் இறுதியாக்கப்பட்ட பின்னர் உரிய சம்பவம் தொடர்பாக நாங்கள் நடவடிக்கை எடுப்பதற்கு உள்ளளோம் என்பதை இத்தால் அறியத்தருகின்றேன். | இருப்புக்களிலுள்ள பற்றாக்குறைகளிற்கு பொறுப்பான அதிகாரிகளிற்கு எதிராகவும் உரிய நட்டங்களை அறவீடு செய்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 2006 சனவரி 25 ஆம் திகதிய 08 ஆம் இலக்க தேசிய பெறுகை முகவராண்மை சுற்றறிக்கையின் 2.14.1 ஆம் வழிகாட்டலின் பிரகாரம் வரிசை அமைச்சு செயலாளரின் அங்கீகாரத்தை பெற்றுக்கொள்ளாமல் ரூபா 488,604 தொகை செலவிடப்பட்டு வாகனமொன்று திருத்தம் செய்யப்பட்டிருந்தது. | தேசிய பெறுகை முகவராண்மையின் பெறுகைக் குழுவின் அங்கீகாரத்துடன் அவசர திருத்தமொன்றாக இது மேற்கொள்ளப்பட்டிருந்தது. | அரசாங்க பெறுகை வழிகாட்டல் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | 1994 யூன் 14 ஆம் திகதிய 95 ஆம் இலக்க பொதுமுயற்சிகள் சுற்றறிக்கையின் 02 ஆம் பந்தியின் | பணிப்பாளர் சபை போக்குவரத்துப் படிகளை அனுமதித்திருந்த போதிலும் | சுற்றிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட |

| | | | |
|---|---|---|---|
| | ஏற்பாடுகளிற்கு முரணாக கம்பனி 28 சிரேஷ்ட நிலை முகாமையாளர்கள் மற்றும் பதவிநிலை உத்தியோகத்தர்களிற்கு ரூபா 1.72 மில்லியன் தொகையான பாதிடப்பட்ட படிகளை வழங்கியிருந்ததுடன் ஒன்பது இடைநிலை மற்றும் குறைந்த நிலை முகாமையாளர்களிற்கு ரூபா 2.12 மில்லியன் தொகையான சாரதிகளின் படிகளும் ரூபா 438,934 தொகையான போக்குவரத்துப் படிகளும் மீளாய்வாண்டின் போது செலுத்தப்பட்டிருந்தன. | சாரதிகளின் படியை அனுமதித்திருக்கவில்லை. அத்துடன் முறையான ஆய்வு மேற்கொள்ளப்பட்ட பின்னர் இது வழங்கப்பட்டிருந்தது. போக்குவரத்து படியை வழங்குவதன் மூலம் ஊழியர்களை ஊக்குவிப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்றதுடன் இது கம்பனியின் இலக்குகளை அடைந்துகொள்வதற்கு அவர்களிற்கு உதவும். | வேண்டும். |
| (ஈ) | 2015 மே 25 ஆம் திகதிய 02/2015 ஆம் இலக்க பொதுமுயற்சிகள் சுற்றறிக்கையின் 02 ஆம் பந்தியின் பிரகாரம் தொலைபேசி படிகளை பெற்றுக்கொள்வதற்கு உரித்தற்ற பத்து உத்தியோகத்தர்களிற்கு ரூபா 102,167 தொலைபேசி படியொன்று செலுத்தப்பட்டிருந்தது. | ஆகக்குறைந்த எண்ணிக்கையான ஊழியர்களை பயன்படுத்தி ஆகக்கூடியளவு சேவையை பெற்றுக்கொள்வதற்கு கம்பனி எப்பொழுதும் முயற்சி செய்கின்றது. அதற்கிணங்க ஆகக் கூடிய எண்ணிக்கையான ஊழியர்களை பயன்படுத்துவதன் மூலமும் கடமைகளின் செயலாற்றலின் போது அவர்களிற்கு அத்தகைய படியொன்றை வழங்குவதன் மூலமும் ஆற்றப்படும் கடமைகளை பெற்றுக்கொள்வது இலகுவானதாகும். | சுற்றிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (உ) | 2015 மே 25 ஆம் திகதிய 01/2015 ஆம் இலக்க பொதுமுயற்சிகள் சுற்றறிக்கையின் 3.3.2.1 ஆம் பந்தியின் பிரகாரம் வரிசை அமைச்சின் அங்கீகாரத்தை பெற்றுக்கொள்ளாமல் அங்கீகரிக்கப்பட்ட எரிபொருள் எல்லையை விஞ்சி ரூபா 352,690 பெறுமதியான எரிபொருளை தலைவர் பெற்றிருந்தார். | பணிப்பாளர் சபைக்கு விளக்கமளிக்கப்பட்டு நுகரப்பட்ட எரிபொருளிற்காக அங்கீகாரம் பெறப்பட்டிருந்ததுடன் தலைவரால் எரிபொருள் எல்லையை விஞ்சி பயன்படுத்தப்பட்ட விடயம் அமைச்சு செயலாளரின் அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. அமைச்சில் ஏற்பட்ட மாற்றங்கள் காரணமாக இது இன்னமும் அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை. | சுற்றிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவுகள் ரூபா 47,396,415 மிகையொன்றாக காணப்பட்டதுடன் அதற்கு எதிராக

முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 32,301,910 ஆக காணப்பட்டதனால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் போது நிதி விளைவுகளில் ரூபா 79,698,325 முன்னெற்றமொன்று அவதானிக்கப்பட்டது. மீளாய்வாண்டில் பயிரிடப்பட்ட பிரதான பயிர்களாக காணப்பட்ட தேங்காய் விற்பனை மற்றும் மரமுந்திரிகை பயிரிடல்கள் மூலம் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது இலாபத்தில் ரூபா 63,670,269 ஆல் ஏற்பட்ட அதிகரிப்பு இம் முன்னேற்றத்திற்கு பிரதான காரணமாகும்.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் யூலை 05 இல் பளுகஸ்வெவ தோட்டத்தில் நடைபெற்ற விழாவொன்று தொடர்பாக புதினப்பத்திரிகை விளம்பரங்கள், உணவு, பரிசில்கள் மற்றும் ஏனைய செலவினங்களிற்காக ரூபா 707,991 தொகையை கம்பனி செலுத்தியிருந்ததுடன் நாளாந்த கொடுப்பனவை பெறுகின்ற இந்நிகழ்வில் பங்குபற்றியிருந்த 616 தோட்டப் பணியாளர்களிற்காக ரூபா 462,000 தொகை செலுத்தப்பட்டிருந்தது. | புதினப் பத்திரிகை விளம்பரங்கள் மற்றும் தொடர்புபட்ட கட்டணங்களின் பிரசுரிப்பிற்காக பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் பெறப்பட்டிருந்ததுடன் தோட்ட பிரிவுகளிலிருந்து பணத்தை மீள்நிரப்பு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. தலைமை அலுவலகத்தால் செலவிடப்பட வேண்டிய தொகையாக தங்களால் குறிப்பிடப்பட்ட தொகையை இனங்காண்பதற்கும் பளுகஸ்வெவ தோட்டத்திற்கான தொகையை மீள்நிரப்பு செய்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. | பணத்தை செலவிடும் போது உரிய செலவினம் கம்பனியின் நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு தொடர்புபட்டிருந்ததா என கருத்தில் கொள்வதன் மூலம் செலவினம் மேற்கொள்ளப்பட வெண்டும். |
| (ஆ) | கம்பனிக்காக கடனளிப்பதற்கும் இதில் குறிப்பிடப்படும் கூட்டுத்தாபனங்கள், கம்பனிகள் மற்றும் அமைச்சுக்களிற்காக கடனை பெறுவதற்கும் சட்டரீதியான அதிகாரம் காணப்படாத போதிலும் மக்கள் தோட்ட அபிவிருத்தி சபை, எல்கடுவ பிளான்டேஷன் லிமிட்டட், இலங்கை அரச பெருந்தோட்டங்கள் கூட்டுத்தாபனம், அரச வளங்கள் மற்றும் தொழில்துறை அபிவிருத்தி அமைச்சு மற்றும் வரையறுக்கப்பட்ட இலங்கை இறப்பர் உற்பத்தி மற்றும் ஏற்றுமதிக் கூட்டுத்தாபனம் என்பவற்றிற்கு 2010 ஆம் ஆண்டில் கம்பனியால் | அமைச்சு செயலாளரின் அறிவுறுத்தல்களின் பிரகாரம் 2010 ஆம் ஆண்டில் அரச நிறுவனங்களிற்கு அவற்றின் குறுங்கால தொழிற்படு மூலதன தேவைப்பாடுகளை எதிர்கொள்வதற்கு ரூபா 105 மில்லியன் தொகையான கடன்களை சிலாபம் பிளான்டேஷன் லிமிட்டட் வழங்கியிருந்தது. எனினும் உடன்படிக்கையின் பிரகாரம் செலுத்தப்பட்ட கடன் அல்லது வட்டியை அந் நிறுவனங்கள் எதுவும் இன்னமும் செலுத்தியிருக்கவில்லை. பணத்தை அறவீடு செய்வதற்கு ஒவ்வொரு நிறுவனத்திற்கும் கடிதங்கள் தொடர்ந்து | இக் கடன் மீதிகளை அறவீடு செய்வதை துரிதப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | |
|---|---|
| கடனளிக்கப்பட்ட ரூபா 105 மில்லியன் கடன் மற்றும் மீளாய்வாண்டின் இறுதியிலுள்ளவாறான தொகைக்குரிய வட்டி உள்ளடங்கிய ரூபா 164.5 மில்லியன் கூட்டுமொத்தத்தை அறவீடு செய்வதற்கு மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அனுப்பப்பட்டிருந்த போதிலும் பணம் இன்னமும் அறவீடு செய்யப்பட்டிருக்கவில்லை. |

## 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| **கணக்காய்வு அவதானிப்பு** | **முகாமைத்துவ கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| மீளாய்வாண்டின் இறுதியளவில் சிரேஷ்ட மற்றும் மூன்றாம் நிலைகளில் உள்ள 17 பதவிகளில் 35 உத்தியோகத்தர்களிற்கு வெற்றிடங்கள் காணப்பட்டன. இவ் வெற்றிடங்களை நிரப்புவதற்கு அல்லது ஊழியர்களின் தற்போதைய தேவைப்பாட்டை அடிப்படையாகக் கொண்டு பதவிகள் மற்றும் பதவியணியினரின் எண்ணிக்கையை மீளாய்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. 10 ஆண்டு காலப்பகுதிக்கு முன்னர் பிரதம உள்ளக கணக்காய்வாளர், உதவி முகாமையாளர் மற்றும் உதவிக் கணக்காளர் பதவிகளிற்கு உத்தியோகத்தர்கள் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் இப் பதவிகளிற்காக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரத்தை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அத்துடன் இரண்டு பணியாளர்கள் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியை விஞ்சி ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டிருந்தனர். | முகாமைத்துவம் நிச்சயமாக பதிலளித்திருக்கவில்லை. | கம்பனியின் ஊழியர்களின் தற்போதைய தேவைப்பாட்டின் பிரகாரம் உரிய பதவிகளை அங்கீகரிப்பதற்கு முகாமைத்துவம் பொறுப்பாக இருக்க வேண்டியதுடன் எந்தவொரு சந்தர்ப்பங்களின் கீழும் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியை விஞ்சி எந்தவொரு ஆடசேர்ப்பையும் மேற்கொள்ளக்கூடாது. |